JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **25/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | **Tamilmani** | Caste | |
| Father's Name | **Balakrishnan** | Calling | |
| Village | **Vaikkalmedu** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 29.04.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரீசியன் ஆக வேலை செய்து வருகிறேன். 05.03.2016 ம் தேதி இரவு 8 மணியிலிருந்து 8.15 மணி இருக்கும். நானும் என்னுடன் வேலை செய்யும் முனியப்பன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் நசியனூர் சென்று விட்டு வெங்கடேஸ்வரா புட் பிராசஸிங்க் கம்பெனிக்கு வந்து கொண்டிருக்கும் போது அப்போது வாவிக் கடை அருகே மேகநாதன் அவரது இருசக்கர வாகத்துடன் சாலையை கடக்கும் போது வெள்ளை நிற செவரலெட் கார் வந்து வேகமாக மோதியதில் மேகநாதன் கீழே விழுந்ததில் அவருக்கு தலையிலும், தோள்பட்டையிலும் அடிபட்டு இருந்தது. விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநரை தெரியுமா என்றால் ஆஜரில் உள்ள எதிரி தான் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை உண்டாக்கிய நபர் ஆவார். 108 ஆம்புலன்ஸ்ற்கு போன் செய்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சிகிச்சைக்கு சேர்த்தோம். மேகநாதனை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே இறந்து போய் விட்டதாக கூறினார்கள்.

2. சவக் கிடங்கில் மேகநாதனின் உடல் வைக்கப்பட்டிருந்தது. அப்போது போலீசார் வந்து மேகநாதனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்தில் இறந்து போன மேகநாதன், நான் , முனியப்பன் ஆகியோர்கள் வெங்கடேஷ்வரா Food Processing Industry என்ற கம்பெனியில் ஒன்றாக வேலை பார்த்து வருகிறோம் என்றால் சரிதான். மூவரும் நண்பர்கள் என்றால் சரிதான். வெங்கடேஷ்வரா Food Processing Industry கம்பெனியில் நான் எலக்ட்ரீசியன் ஆக வேலை பார்த்து வருகிறேன். 05.03.2016 ம் தேதி மேகநாதனுக்கு விபத்து ஏற்பட்ட போது எங்கு இருந்தோம் என்றால் நானும் முனியப்பனும் நசியனூர் ஒரு வேலையாக சென்று கொண்டிருந்தோம். மேகநாதன் சேலம் சென்று கொண்டிருந்தார்.

2. நாங்கள் நசியனூரில் இருந்து கம்பெனிக்கு திரும்பி வந்து கொண்டிருந்தோம். நசியனூர் எதற்கு சென்றோம் என்றால் எங்கள் சொந்த வேலையாக சென்றோம். நாங்கள் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் முனியப்பனுக்கு சொந்தமான கிரக்ஸ் இருசக்கர வாகனத்தில் சென்றோம். வாகன பதிவு எண் தெரியாது. கம்பெனியில் பொதுவாக இரவு 7.00 மணி வரை வேலை இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்றைய தினம் கம்பெனியில் இருந்து மாலை 5.45 மணிக்கு சென்று இருப்பபேன்.

3. என்னுடைய வேலை முடிந்து திரும்பும் போது சுமார் இரவு 8.00 மணி இருக்கும். நான் 5.45 மணிக்கு செல்வதற்கு அனுமதி எதுவும் பெற்று சென்றேனா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் வருகை பதிவேடு உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் பகுதியில் வாகனங்கள் கடப்பதற்கு, பாதசாரிகள் கடப்பதற்கும் இடம் உள்ளதா என்றால் உள்ளது. வாகனங்கள் மெதுவாக போவதற்கு அங்கு சிக்னல் உள்ளதா என்றால் உள்ளது. மேகநாதன் அன்றைய தினம் வண்டியின் பின்னால் சிலிண்டர் கட்டிக் கொண்டு சேலம் நோக்கி சென்றார் என்றால் சரிதான்.

4. இறந்து போன மேகநாதன் ஓட்டிச் சென்ற வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பஜாஜ் டிஸ்கவர் வண்டியில் சென்றார். மேகநாதனுக்கு பார்வை குறைபாடு உள்ளதா என்றால் இல்லை. பொதுவாக சிலிண்டரை வண்டியில் கட்டிக் கொண்டு திரும்பி பார்ப்பதற்கு சிரமமாக இருக்கும் என்றால் சரியல்ல.நாங்கள்

சேலத்திலிருந்து பெருந்துறை நோக்கி வந்தோம். மேகநாதன் பெருந்துறையிலிருந்து சேலம் நோக்கி சென்றார். அவ்வாறு வரும் போது தான் டமார் என்ற சத்தம் கேட்டு விபத்து ஏற்பட்ட இடத்திற்கு சென்று போய் பார்த்தேன் என்றால் ஆமாம். அவ்வாறு சென்று பார்க்கும் போது தான் மேகநாதனுக்கு தான் விபத்து ஏற்பட்டது எனத் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

5. அவ்வாறு பார்த்ததிற்கு பின்னிட்டு கார் சென்று விட்டது. நான் ஆம்புலன்ஸ் மூலமாக மேகநாதனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லக்கூடிய காரில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. விபத்து ஏற்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் கடப்பதற்கு சுரங்கப் பாதையோ, மேம்பாலமோ இல்லை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் செடி வகைகள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் மற்றும் முனியப்பன் மற்றும் இந்த வழக்கின் புகார்தாரர் ஆகியோர்கள் விபத்து ஏற்பட்டது தெரிந்து மருத்துவமனை சென்று பார்த்தோம் என்றால் சரிதான்.

6. விபத்து நடந்ததை அ.சா.1 தான் எனக்கு தகவல் கொடுத்தாரா என்றால் இல்லை. நானும் முனியப்பனும் வரும் போது விபத்து ஏற்பட்டது. இரவு 8.45 மணிக்கு வாகனத்தை சரிவர கவனிக்காமல் மேகநாதன் இயக்கியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி விபத்துக்கு மேகநாதனின் கவனக்குறைவாகவும் சாலை விதிகளை கடைபிடிக்காமலும் விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. மேற்படி விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் நான் கேள்வி பட்ட சாட்சியம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

**(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).**